**காத்தான்குடி நகர சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காத்தான்குடி நகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 181(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காத்தான்குடி நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பதும் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நகர சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு உத்தியோகத்தர் சம்பளம் மற்றும் உறுப்பினர்களின் கொடுப்பனவுகளுக்காக மாகாண சபையிடமிருந்து பெறவேண்டிய ரூபா 5,612,569 நிதிக்கூற்றில் பெற வேண்டியதாக வெளிப்படுத்தப்பட்டிருக் கவில்லை. | அடுத்த நிதியாண்டில் இது திருத்தப்பட்டு பெறவேண்டிய மீளளிப்புத் தொகை வெளிப்படுத்தப்படும். | பெறவேண்டியவை கள் கணக்ககளில் சொத்தாகக் காட்ட ப்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் நூலகங்களுக்கு மீளாய்வா ண்டின் இறுதி வரையிலும் நன்கொடையாக கிடைக்கப்பெற்ற ரூபா 1,973,692 பெறுமதியுடைய புத்தகங்கள் நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்து வரப்பட்டி ருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சேர்ப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்படு கின்றது. | சொத்துக்களை கணக்குகளில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப் பட்டுள்ள ரூபா 95,660,790 பெறுமதியான 05 சொத்து விடயங்களுடன் தொடர்புடைய காணி உறுதி, நிலையான சொத்துப் பதிவேடு, ஆதனங்களின் பெறுமதிகளை | ஆவணங்களை பெறுவத ற்கும் அதற்கான பதிவேடு களை முறையாக பேணுவ தற்கும் தற்போது நடவடிக் கைகள் மேற்கொள்ள ப்பட்டு வருகின்றது. | சொத்துக்களுக்கா ன எழுத்மூலச் சான்களை பெற்று க்கொள்ள நடவடி க்கை எடுக்கப்பட வேண்டும். |

தனித்தனியாக உறுதிப்படுத்தும் பதிவேடு சொத்துப் பதிவேடுகள் மற்றும் உரிமையை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை.

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள் கோவை | | | |
| (i) நிதிப்பிரமாணம் 371 | கடந்த 08 வருடங்களாக பல்வேறு தேவைகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 3,694,066 முற்பணங் களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | நீண்டகாலமாக தீர்க்கப்படாத முற்பணங்களை சீர்செய்ய குழு அமைக்கப்பட்டு சீர்செய்ய நடவடி க்கை எடுக்கப்பட் டுள்ளது. | நிதிப்பிரமாணத் தின் பிரகாரம் முற்பணங்களை அறவிட நடவடி க்கை எடுக்கப் பட வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 571 | நீண்ட காலமாக வைப்பு கணக்கில் தொடர்ச்சி யாக காணப்படுகின்ற ரூபா 15,160,840 தொகை யான வைப்புக்கள் அகற்றப்பட்டிருக்கவில்லை | சில நீண்டகால வைப்புக்களை வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | நிதிப்பிரமாணத் தின் பிரகாரம் வைப்புக்களை கொடுத்துத் தீர்க்க அல்லது வருமானத்திற்கு மாற்ற நடவடி க்கை எடுக்க ப்பட வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 9,523,357 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா 18,709,100 ஆகும்.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 10,166,724 வீத வரி தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் ஏற்பட்ட கொவிட் 19 கொரொனா பெருந்தொற்றின் காரணமாக அனைத்து நடவடிக்கைகளும் முடக்கப்பட்டன. தற்போது ஆதன மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,754,844 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 10,408,908 தொகையான முத்திரைக் கட்டணம் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முத்திரை வரி மற்றும் நீதிமன்ற தண்டப்பணங்களை அறவிடுவதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2020 யூன் 07 அன்று கவசிமா இயந்திரத்துடன் தொடர்புபட்ட ரூபா 27,774,030 பெறுமதியான உதிரிப்பாகங்கள் தீ அழிவினால் சேதமடைந்திருந்ததுடன், குறித்த சேத நட்டத்தினை பொறுப்பேற்க வேண்டிய தரப்பினர்கள் 2022 யூன் 30 வரையிலும் சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | தங்களால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் கவனத்திலெடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது | சோதத்திற்கான தரப்பினர்களை அடையாளப்படுத்தி இழப்பீட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 1995 தொடக்கம் 2013 வரை உள்ளூராட்சி சபைகளின் ஓய்வூதியத் திட்டத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 2,375,058 மாதாந்தப் பங்களிப்புத் தொகையானது 2022 மார்ச் 31 வரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | இத்தொகைகளை அனுப்பிவைக்க சபையின் நிதி நிலைமை மற்றும் திரவத்தன்மையினை கவனத்திற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | பங்களிப்புத் தொகைகளை ஓய்வூதியத் திட்டத்திற்கு செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் கடன் பொறுப்பாக காட்டப்பட்டுள்ள ரூபா 6,643,239 செலவுக் கடன் வழங்குனர் தொகை 05 வருடங்களுக்கு மேலாக தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | எவ்வித ஆவணங்களோ பதிவேடுகளோ பெறமுடியாதுள்ளதனால் உள்ளுராட்சி ஆணையாளர் மற்றும் கிழக்கு மாகாண ஆளுநர் ஆகியோரினது கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கடன்களை கொடுத்துத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | நூதனசாலையில் காணப்படும் தொல்லியல் பொருட்கள் தொடர்பில் வருடாந்த பொருள் இருப்பு கணிப்பீடொன்று 2022 யூன் 30 வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நூதனசாலை தொடர்பாக தங்களால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் வருடாந்த பொருட் கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.3 மனித வளங்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையினால் 17 வகையான பதவிகளுக்குரிய 39 வெற்றிடங்கள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | பதவிகளை அனுமதித்தல் மற்றும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக படிவங்கள் தயாரிக்கப்பட்டு எம்மால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | பதவி வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஒய்வு பெற்ற, வேலையை விட்டுச்சென்ற, மரணமடைந்த 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 440,550 கடன் தொகையினை ஓய்வூதியத்திலிருந்து அல்லது பிணையாளியிடமிருந்து அறவிடுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இக்கடன் சீர்செய்யப்படாமையால் இந்நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடர நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஊழியர் கடன்களை அவர்களிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உருவாக்கப்பட்டு அவற்றை அடைந்து கொள்வதற்கான பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இவை தொடர்பான அடைவகளை மதிப்பீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | நிலைபேறான அபிவிருத்தி குறிகாட்டிகளை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |